

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கேசேகர்பாபு ஆகியோர் நேற்று முன்தினம் (5.10.2025) கொளத்தூர் ஏரிக்கரையை வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் மேம்படுத்தப்பட்டு வரும் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினர். இந்த ஆய்வின்போது மேயர் திருமதி.ஆர்.பிரியா, நெடுஞ்சாலைத்துறை செயலாளர் டாக்டர் ஆர்.செல்வராஜ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள், வாக்குசாவடி ஒருங்கிணைப் பாளர்கள் மற்றும் (BLA 2) பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் பாலப்பம்பட்டி, விக்னேஷ் திருமண மண்டபத்தில் மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர் அர.சக்கரபாணி ஆலோசனைகள் வழங்கினார். இதில் அமைச்சர், என்.கயல்விழி செல்வராஜ், கே.ஈஸ்வரசாமி எம்.பி. கலந்து கொண்டு உரையாற்றினர். இதில் மாவட்ட அவைத் தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் அ.தமிழ்மறை (உடுமலைப்பேட்டை) கரும்புக்கடை சாதிக் பாட்ஷா (மடத்துக்குளம்) உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### கீழ்ப்பாக்கம் தமிழ்நாடு மனநலம் மற்றும் நரம்பியல் ஒப்புயர்வு மைய புதிய கட்டிடத்தின் கட்டுமானப் பணிகள் –

# கொளத்தூர் ஏரி பூங்கா செல்வதற்கு சேவைச் சாலையின் பணிகள் - மேம்படுத்தப்பட்டு வரும் கொளத்தூர் ஏரிக்கரை பணிகள்!

## அமைச்சர்கள் எ.வ.வேலு – பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு! பணிகளை விரைந்து முடித்திட அறிவுறுத்தினர்!

சென்னை, அக். 7 -

நேற்று முன்தினம் (5.10.2025) பொதுப்பணிகள், நெடுஞ்சா சாலைகள் மற்றும் சிறு துறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் இந்து சமயம் மற்றும் அறநிலை யங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதி, மேடவாக்கம் டேங்க் ரோடு, கீழ்ப்பாக்கத் தில் பொதுப்பணித்துறை யின் சார்பில் கட்டப் பட்டு வரும் தமிழ்நாடு மனநலம் மற்றும் நரம்பியல் ஒப்பு யர்வு மையம் (TNIMHANS, Kilpauk) புதிய கட்டிடத்தின் கட்டுமானப் பணிகளையும், கொளத்தூர்-பெரம்பூர் பேப் பர் மில்ஸ் சாலையிலிருந்து வரும் வாகனங்கள் உள் வட்ட சாலையை அடைவ தற்கும், கொளத்தூர் ஏரி பூங்கா செல்வதற்கும் 600 மீட்டர் நீளம் மற்றும் 7.50 மீட்டர் அகலம் கொண்ட சேவை சாலையின் இருபுற மும் 2.00 மீட்டர் அகலத் திற்கு நடைபாதையும் அமைக்கப்பட்டு வரும் பணி களையும், கொளத்தூர் ஏரிக் கரையை வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் மேம்படுத் தப்பட்டு வரும் பணிகளை யும் நேரில் சென்று பார்வை யிட்டு ஆய்வு செய்தனர்.

பருவமழை தொடங்க உள்ள நிலையில் நெடுஞ் சாலை துறையில் மேற் கொள்ளப்பட்டு வரும் பணி கள் குறித்தான செய்தியா ளர்கள் கேள்விக்கு அமைச் சர் எ.வ. வேலு அவர்களின் பதில் வருமாறு:-

உங்களுடைய சந்திப் பிற்கு பிறகு, நானும் இந்து சமயம் மற்றும் அறநிலையங் கள் துறை அமைச்சர் அவர்க ளும், நெடுஞ்சாலைத் துறை யைப் பற்றிய ஆய்வை மேற்கொள்ள இருக்கி றோம். குறிப்பாக கொளத் தூர் பகுதியில் இந்த ஆய்வு நடைபெற இருக்கிறது. சென்னை மாநகராட்சியில் மிகவும் குறைவான சாலை களே நெடுஞ்சாலைத் துறை யின் கட்டுப்பா ட்டில் உள் ளன. பெரும்பாலான சாலை கள் - சுமார் 85% சதவீதம் - மாநகராட்சி கட்டுப்பாட் டில் தான் உள்ளன. சில சம யங்களில் பத்திரிகை நண்ப ர்கள் நெடுஞ்சாலைத் துறை யின் சாலையை மாநகராட் சிக்கு சொந்தமானதாகவும், மாநகராட்சியின் சாலையை நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமானதாகவும் எழுதி யிருக்கின்றனர். இரண்டுமே அரசு சார்ந்த துறைகள்தான் என்றாலும், தெளிவான விவ ரங்களுடன் தவறான புரிதல் தவிர்க்கப்பட வேண்டும்.

மழைக்காலம் என்பது ஒவ்வொரு ஆண்டும் இயற் கையாக வரக்கூடிய ஒன்று. எனவே, மழை தொடங்குவ தற்கு முன்பே சாலை பணி களை முடிக்க வேண்டும் என்ற ஆணையை நாங்கள் வழங்குகிறோம். அதன் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன. சில நேரங்களில் பணி தாமதமாகும் போது, பாதுகாப்பு கருதி, பேரிகேட் போன்றவை அமைக்க வேண்டும். விபத்து ஏற்படக் கூடாது என்பதற்காகவே சில கட்டுப்பாடுகளை வைக் கிறோம். பணிகளை நிறுத்த வேண்டும் என்று எந்த நிலை யிலும் ஆணை பிறப்பிக்கப் படவில்லை.

மழைக்காலம் என்பது கட்டடப் பணி போல அல்ல; வேலை ஒரு இடத் தில் செய்து முடித்து, பிறகு மற்ற இடத்திற்கு செல்ல லாம் என்பதுபோல கிடை யாது. மக்கள் வீடுகளை விட்டு வெளியே வரும் போது முதலில் சாலையில் காலடி வைக்கின்றனர். எனவே, நாங்கள் பணிகளை வேகமாக செய்து கொண்டி ருக்கிறோம். நெடுஞ்சாலைத் துறை இந்த இலக்கை அடைய முடியும்.

தமிழ்நாட்டில் சுமார் 66,000 கிலோமீட்டர் நீள மான நெடுஞ்சாலைகள் உள் ளன. இதுபோன்ற பெரிய துறையில் கால அவகாசம் பார்க்காமல், எப்போதெல் லாம்நேரம்கிடைக்கின்றதோ அப்போதெல்லாம் சாலை பணிகளை மேற்கொள்கி றோம். மழைக்காலங்களில் பாதுகாப்பு கருதி தேவை யான உபகரணங்களை பயன்படுத்தி பணிகளை மேற்கொள்கிறோம். மழைக் காலம் என்பதற்காக நாங்கள் பணிகளை நிறுத்துவதில்லை. பாதுகாப்பை முன்னிலைப் படுத்தி அனைத்து பாது காப்பு நடவடிக்கைகளும் (safety measures) மேற்கொள் ளப்படுகின்றன.

**மத்திய கைலாஷ் மேம்பாலம்!**

நீங்கள் “செப்டம்பர்” என்று கூறியிருந்தீர்கள். ஆனால் நான், அக்டோபருக் குள் முடியும் எனவே நம்புகி றேன் என்று முன்பே குறிப் பிட்டுள்ளேன். அந்தப் பணிகளை நான் கடந்த வாரம், பத்திரிகையாளர்கள் இல்லாத நேரத்தில் நேரில் சென்று பார்வையிட்டேன். பணிகள் வேகமாக நடை பெற்று வருகின்றன.

சென்னை மற்றும் புறந கர்ப் பகுதிகளில் உள்ள வேறுபாடு என்னவென்றால் - புறநகர் பகுதிகளில் பைபாஸ் சாலைகள் உள்ள தால், இரவும் பகலும் பணி களை நடத்த முடிகிறது. ஆனால் சென்னையில், காவல்துறையின் அனுமதி தேவைப்படுகிறது. அதிகபட் சமாக இரவு 10 மணி முதல் காலை 5 மணி வரை மட் டுமே பணிக்கான அனுமதி வழங்கப்படுகிறது. இந்த நேரத்திற்குள் பாதாள சாக் கடை பணி, பாலம் கட்டும் பணி, பெரிய உபகரணங் கள், ஐ-பீம் போன்றவற்றை கொண்டு வர வேண்டிய அவசியம் உள்ளது. அந்த நேரக் கட்டுப்பாடுகள் கார ணமாகவே பணிகளில் சற்று தாமதம் ஏற்படுகிறது.

போக்குவரத்து நெரிசல் அதிகமான இடங்களில் உயர்மட்ட சாலைகள் மற் றும் மேம்பாலங்கள் கட்டுவ தற்கான திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. அந்தத் திட்டங்க ளின் கீழ், 3.20 கி.மீ தொலைவில் அண்ணா சாலையில் ஒரு உயர் மட்ட மேம்பாலம் கட் டப்படுகின்றது (தேனாம் பேட்டையில் ஆரம்பித்து சைதாப்பேட்டை வரை). திருவான்மியூர் நோக்கி செல் லும் சாலை தற்போது மிகுந்த நெரிசலை சந்தித்து வருகிறது. இதற்காக 14 கி.மீ நீளமுடைய புதிய மேம்பா லம் கட்டும் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு வழங்கப்பட் டுள்ளது. இது தமிழ்நாட்டில் நீளமான மேம்பாலமாக இருக்கும். அந்த பணிக்கான ஒப்பந்தங்களும், டெண்டர் அறிவிப்புகளும் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளன.

**தேனாம்பேட்டை - சைதாப் பேட்டை மேம்பாலம் எப்போது திறக் கப்படும்?**

தற்போதைய ஒப்பந்த காலத்தின்படி, இந்தப் பாலம் நவம்பர் 2026 வரை முடிக்க வேண்டும். இருப்பி னும், நாங்கள் அதை பொங் கலுக்குள் முடிக்கலாமா என்ற இலக்குடன் பணி களை வேகமாக செய்து வரு கின்றோம். இந்தப் பாலம் RC Foundation (ரீ-இன் போர்ஸ்ட் கான்கிரீட்) கொண்டு கட்டப்படுகிறது. மேல்பகுதியில் முழுக்க முழுக்க இரும்பு ஸ்ட்ரக்சர் அமைக்கப்படுகிறது. இந்தி யாவின் பல இடங்களில் (பரோடா, ஹைதராபாத், மும்பை, சத்தீஸ்கர், தமிழ் நாட்டில் கும்மிடிப்பூண்டியில் உள்ள பெண்ணார் தொழிற் சாலையில்) இந்த இரும்பு பில்லர் மற்றும் ஐ பீம் ஸ்ட்ரக் சர்கள் தயாராகின்றன. அனைத்து இடங்களிலும் கட்டுமான தரம் சரியாக உள்ளதா என்பதை நாங் களே நேரில் சென்று ஆய்வு செய்கிறோம். அடுத்த வாரம் சத்தீஸ்கர் செல்ல உள் ளோம். Quality Control Engineers-ஐ நியமித்து, ஒவ் வொரு இடத்திலும் ஒத்து ழைப்புடன் பணிகள் நடை பெறுகின்றன.

**பண்ருட்டி சாலை!**

இந்த சாலை முழுவதும் தேசிய நெடுஞ்சாலைத்துறை (NHAI) கட்டுப்பாட்டில் உள் ளது. இது மத்திய அரசின் பொறுப்பு. நாங்கள் கடந்த 4 ஆண்டுகளாக, தொடர்ந்து மத்திய அமைச்சர்களிடம், கடிதம் மூலம் கேட்டுக் கொண்டு இருக்கிறோம்.

முதலமைச்சர் அவர்க ளும் இரண்டு முறை நேரில் சென்று கேட்டுள்ளார். தற் போது மூன்று ஒப்பந்ததாரர் கள் மாறிய பிறகு, ஒரு புதிய ஒப்பந்ததாரர் மூலமாக பணி கள் ஆரம்பிக்கப்பட்டுள் ளன. மாநில அரசு, தேவை யான அனைத்து உதவிகளை யும் செய்து வருகிறது. வேலை விரைவாக நடைபெ றுவதற்காக முழு ஒத்துழைப் பும் வழங்கப்படுகின்றது.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின்போது மேயர் திருமதி.ஆர்.பிரியா, நெடுஞ்சாலைத்துறை செய லாளர் டாக்டர் ஆர்.செல்வ ராஜ், முதன்மை செயல் அலு வலர் அ.சிவஞானம், மாநக ராட்சி மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர். கௌஷிக், பொதுப்பணித் துறை முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) மணிவண்ணன், தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) மணிகண்டன், நெடுஞ்சா லைத்துறை (பெருநகரம்) தலைமைப் பொறியாளர் ஜவகர் முத்துராஜ், கண்கா ணிப்புப் பொறியாளர் ராஜ துரை, சிஎம்டிஏ கண்காணிப் புப் பொறியாளர் ராஜன் பாபு, அரசு மனநல காப்பக இயக்குநர் டாக்டர் எம். மாலையப்பன், மண்டலக் குழுத்தலைவர் கூ.பீ. ஜெயின், மாமன்ற உறுப்பி னர் நாகராஜன், உள்ளாட் சிப் பிரதிநிதி.வே.வாசு மற் றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

### மன்னார்குடி அரசு தலைமை மருத்துவமனையில்

# ரூ.20.7 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டமைப்பு வசதிகள்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா திறந்து வைத்து ஆய்வு!

திருவாரூர், அக்.7-

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அரசு தலைமை மருத்துவமனை யில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை யின் சார்பில் ரூ.7லட்சம் மதிப்பீட்டில், 10 படுக்கை வசதியுடன் ஆதரவற்ற, மன நலம் பாதிக்கப்பட்டோருக் கான அவசர சிகிச்சை மற் றும் மீள் மையத்தினை மாண்புமிகு தொழில் முத லீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா திறந்து வைத்தார்.

தொடர்ந்து மன்னார் குடி அரசு தலைமை மருத் துவமனையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் தீவிர சிகிச்சை பிரிவு கட்டடம் 5அடுக்கு தளங்களுடன் கட்டப்பட்டு வருவதை தொழில் முதலீட்டு ஊக்கு விப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா பார்வை யிட்டு ஆய்வு மேற்கொண் டார்.

தமிழ்நாடு தேசிய நல வாழ்வு குழுமம் சார்பில் திறக்கப்பட்ட இந்த மீள் மையத்தில், சாலைகளில் மன நலம் பாதித்து திரியும் நோயாளிகளை மீட்டு, இந்த மையத்தில் சிகிச்சைக்கு உட்படுத்தி பராமரிக்கப்படு வர். இதற்காக தனியார் அறக்கட்டளை அல்லது தொண்டு நிறுவனம் ஒன்று டன் ஒப்பந்தம் செய்து கொண்டு இந்த மையம் செயல்படும். அத்தகையை மையம் மன்னார்குடி மாவட்ட அரசு தலைமை மருத்துமனையில், மன்னார் குடி நேசக்கரம் அமைப்பு டன் ஒப்பந்தம் செய்து, திறக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுகளில் மாவட்ட ஆட்சியர் மோக னசந்திரன், நகர செயலாளர் வீரா.கணேசன், நகர மன் றத் தலைவர் மன்னை த.சோழராஜன், ஒன்றிய செயலாளர்கள் டி.எஸ்.டி. முத்துவேல், சித்தேரி சிவா, கே.வி.கே.ஆனந்த், வர்த்தக சங்கத் தலைவர் ஆர்வி. ஆனந்த் இணை இயக்குநர் மருத்துவர் எஸ்.சுரேஷ், தலைமை மருத்துவர் என். விஜயகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றன.

### அமைச்சர் மனோ தங்கராஜ் பங்கேற்பு!

# மும்பையில் தி.மு.க. நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

## அலிஷேக் மீரான் தலைமை!

மும்பை, அக். 7 -

மும்பை புறநகர் மாநில தி.மு.க. சார்பாக நிர்வாகி கள் கிளைக் கழகச் செய லாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் பாண்டுப் பிரைட் உயர்நிலைப் பள்ளியில் புறநகர் மாநில பொறுப்பா ளர் அலிஷேக் மீரான் தலை மையில் பொறுப்பு குழு உறுப்பினர் ஜேம்ஸ் தேவ தாசன் இளைஞர் அணி அமைப்பாளர் ந. வசந்த குமார் முன்னிலையில் நடைபெற்றது.

முன்னதாக முதலமைச் சர் அவர்களால் 8 ஆண்டு களுக்கு முன்பு திருவள்ளுவர் மன்றத்தில் திறக்கப்பட்ட அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு அமைச்சர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் .

பின்னர் நடைபெற்ற கூட்டத்தில் தி.மு.க. பொறுப் புக் குழு உறுப்பினர்கள் வதிலை பிரதாபன், இளங்கோ அப்பாதுரை, மெஹபூப் பாட்ஷா ஜெய்னுல் ஆப்தின் வீரை சோபாபு சிவக்குமார் சுந்தர்ராஜ், பேலஸ் துரை, மும்பை மாநகர பொறுப்பாளர் ஜேசுராஜ் , நிர்வாகிகள் அன்பழகன் பொற்கோ, நீதி துரை, ஸ்டீபன், மதியழகன், முலுண்ட் பெருமாள், தானா பாலமுருகன் லத்திப் பாய், பிவண்டி முஸ்ட் டாக் பாய், வாசி முத்து, வாசி பழனி, இலக்கிய அணிதமிழ் நேசன், ஆரே காலனி கோவிந்தராஜ் பாண்டுப் வெங்கடேசன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் தனது உரையில் திராவிட மாடல் அரசை திறம்பட நடத்தி வரும் முதல் அமைச்சர் தளபதி அவர்கள் தமிழ் நாட்டில் கல்வி, மருத்துவம், சுகாதாரம், உட்கட்ட மைப்பு, விவசாயம், தொழில் துறையில் செய்து வரும் அரிய சேவைகள் பற்றியும் வெளி மாநில, வெளி நாட்டில் வாழும் தமிழர்க ளுக்காக கொண்டு வந்துள்ள நல்ல திட்டங்கள் பற்றியும் எடுத்து உரைத்தார்.

### கோவை தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.வி.கே.எஸ்.சபரி கார்த்திகேயன் முன்னிலையில்

# நெகமம் பேரூர் இளைஞர் அணி நிர்வாகிகள் நியமனத்திற்கு நேர்காணல்!

## மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா சிறப்புரை!

நெகமம், அக். 7 -

கழகத் தலைவர் - திரா விட மாடல் ஆட்சி நாயகர்- முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணிச் செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர் களின் ஆலோசனைப்படி, கொங்கு மேற்கு மண்டல பொறுப்பாளர் - முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி ஆதரவோடு, கோவை தெற்கு மாவட்டச் செயலா ளர் தளபதி முருகேசன் அறிவுறுத்தலின்படி பேரூர்க் கழகச் செயலா ளர் ராசு (எ) முத்துக்குமார் தலைமையில் கோவை தெற்கு மாவட்ட இளைஞ ரணி அமைப்பாளர் கே.வி. கே.எஸ்.சபரி கார்த்திகே யன் முன்னிலையில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா சிறப்புரை ஆற்றிட, பெரிய நெகமம் பேரூர்க் கழகத் தில் உள்ள 15 வார்டு, 8 பூத் களுக்கு இளைஞரணி நிர் வாகிகள் நியமனத்திற்கான நேர்காணல் நடைபெற்றது.

இதில் பேரூர்க் கழகத் திற்கு உட்பட்ட 15 வார்டு இளைஞரணி அமைப்பா ளர், துணை அமைப்பாளர் கள் மற்றும் 8 பூத் இளை ஞரணி பொறுப்பாளர் விண்ணப்ப படிவம் வழங் கியவர்களை தேனி வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆஜிப்கான் நேர்காணல் நடத்தினார்.

இந்நிகழ்ச்சியில் சரவண குமார் (பேரூர் கழக இளை ஞரணி அமைப்பாளர்), துணை அமைப்பாளர்கள் சங்கர், ரகுவரன், சிவகார்த் திக், பேரூர்க் கழக துணைச் செயலாளர்கள் சந்துரு (எ) சந்தான கிருஷ்ணன், கிட்டு (எ) கிருஷ்ணசாமி, பேரூர் கழகப் பொருளா ளர் பார்த்திபன், ஒன்றியப் பிரதிநிதி மோகன கிருஷ்ண வடிவேல் மற்றும் வார்டு செயலாளர்கள் நாகராஜ், தனபால், சுல்ஃபி, ஜெயச்சந் திரன், கந்தசாமி , மாரி முத்து, மார்க்கெட் செல்வ ராஜ், ரமேஷ், முருகேசன், வாசு, வார்டு கவுன்சிலர்கள் அரவிந்த்சாமி, நந்தவேல் முருகன், நாகராஜ் ஆகி யோர் கலந்து கொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்டம், தலைவாசல் மத்திய ஒன்றியம் தலைவாசல் ஊராட்சியில் நலன் காக்கும் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. கலந்து கொண்டு முகாமை தொடங்கி வைத்தார். மேலும் பொதுமக்களிடம் குறைகளைக் கேட்டறிந்தார். இம்முகாமில் தே.மலையரசன் எம்.பி., முன்னாள் எம்.எல்.ஏ.க்கள், சின்னதுரை, குணசேகரன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், ஒன்றியச் செயலாளர்கள் சாத்தப்பாடி மணி, பாலமுருகன் மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள் உடனிருந்தனர்.



கோவை தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.வி.கே.எஸ்.சபரி கார்த்திகேயன் முன்னிலையில் நெகமம் பேரூர்க் கழக இளைஞரணி நிர்வாகிகள் நியமனத்திற்கான நேர்காணல் நடைபெற்றது. இதில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா பங்கேற்று சிறப்புரையாற்றினார்.